
அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

## 84 - நுண்கலை

### புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

## கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

### 84 - நுண்கலை

### புள்ளிகளைப் பகிர்ந்தளிக்கும் முறை

**I வினாப்பத்திரம்**

**பல்தேர்வு வினாக்கள்** 01 - 40 = 01 x 40 = 40 புள்ளிகள்

**II வினாப்பத்திரம்**

**1ம் வினா ( கட்டாயமானது )**

01 – 10 = 02 x 10 = 20 புள்ளிகள்

**2 வினா (2 - 7 வரை தெரிவு செய்த வினாக்கள் 04)**

I. பகுதி புள்ளிகள் 02
II. பகுதி புள்ளிகள் 04
III. பகுதி புள்ளிகள் 04 = 10 புள்ளிகள்

**3 வினா**

I. பகுதி புள்ளிகள் 02
II. பகுதி புள்ளிகள் 04
III. பகுதி புள்ளிகள் 04 = 10 புள்ளிகள்

**4 வினா**

I. பகுதி புள்ளிகள் 02
II. பகுதி புள்ளிகள் 04
III. பகுதி புள்ளிகள் 04 = 10 புள்ளிகள்

**5 வினா**

I. பகுதி புள்ளிகள் 02
II. பகுதி புள்ளிகள் 04
III. பகுதி புள்ளிகள் 04 = 10 புள்ளிகள்

**6 வினா**

I. பகுதி புள்ளிகள் 02
II. பகுதி புள்ளிகள் 04
III. பகுதி புள்ளிகள் 04 = 10 புள்ளிகள்

**7 வினா**

I. பகுதி புள்ளிகள் 02
II. பகுதி புள்ளிகள் 04
III. பகுதி புள்ளிகள் 04 = 10 புள்ளிகள்

**மொத்தம்** = **60 புள்ளிகள்**

**இறுதிப்புள்ளி** **100 புள்ளிகள்**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

அந்தரங்கமானது

**අ.පො.ස (සා.පෙළ) විභාගය / க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)**

විෂය අංකය / பாட இலக்கம்: **84**

විෂයය / பாடம்: **நுண்கலை**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 02 | 11. | 03 | 21. | 02 | 31. | 03 |
| 02. | 01 | 12. | 02 | 22. | 04 | 32. | 01 |
| 03. | 03 | 13. | 03 | 23. | 03 | 33. | 02 |
| 04. | 02 | 14. | 02 | 24. | 01 | 34. | 04 |
| 05. | 04 | 15. | 03 | 25. | 04 | 35. | 03 |
| 06. | 01 | 16. | 01 | 26. | 03 | 36. | 01 |
| 07. | 03 | 17. | 03 | 27. | 01 | 37. | 03 |
| 08. | 02/03 | 18. | 02 | 28. | 02 | 38. | 04 |
| 09. | 04 | 19. | 03 | 29. | 04 | 39. | 02 |
| 10. | 03 | 20. | 04 | 30. | 01 | 40. | 02 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

# நுண்கலை II

பகுதி II ன் முதலாம் வினா கட்டாயமானது. நுண்கலை பாடத்திட்டத்தின் எல்லா பகுதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு மாணவரின் திறன், மற்றும் செயன்முறை ---யறிவு என்பவற்றை மதிப்பிடக்கூடிய விதத்தில் இவ்வினாவின் உபவினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1. உங்கள் பாடசாலையில் இம்முறை இடம்பெறும் இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் அலங்கரிக்கும் சந்தர்ப்பங்கள் அனைத்தும் நுண்கலைப் பிரிவு மாணவர்களுக்குப் பொறுப்பளிக்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(i) விளையாட்டுப் போட்டி தொடர்பாக மக்களுக்கு அறிவிப்பதற்குப் பொருத்தமான ஒரு சுவரொட்டியின் மாதிரியை வரைந்து காட்டுக.

(ii) அழைப்பு விருந்தினர்களுக்கு அனுப்புவதற்கான அழைப்பிதழ் அட்டையின் முகப்பிற்குப் பொருத்தமான சித்திரமொன்றை வரைக.

(iii) நெசவுக் கோல முறையில் இல்லங்களின் பெயர்களைத் தயார்செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய பன்ன வகைகள் **இரண்டை** எழுதுக.

(iv) ஆரம்ப நிகழ்வில் இல்லங்களின் பெயர்ப் பலகைகளை ஏந்திவரும் மாணவர்களின் உடைகளை அலங்கரிப்பதற்காக அச்சுப்பதிப்பு முறையில் தயாரிக்கக்கூடிய காட்டுரு ஒன்றை வரைந்து காட்டுக.

(v) 'புறா' இல்லத்தைச் சேர்ந்த மாணவர்களை இனங்காண்பதற்காக அணியக்கூடிய சின்னத்திற்கான படத்தை வரைந்து காட்டுக.

(vi) பரிசு வழங்கும் சந்தர்ப்பத்தில் விளையாட்டு வீரர்களுக்கு வழங்குவதற்காக செயற்கைப் பூச்செண்டுகள் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(vii) ஓய்வு நேரத்தின் போது இல்ல உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சிற்றுணவைப் பொதி செய்வதற்குப் பொருத்தமான பொதியொன்றின் உருத்தோற்றத்தை வரைந்து காட்டுக.

(viii) பேண்ட்வாத்தியக் குழுவின் உறுப்பினர்கள் கழுத்தில் அணிவதற்கான ஆபரணங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய இயற்கை வித்து வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ix) இல்லக் கொடியொன்றை டிஜிற்றல் முறையில் அச்சிடுவதற்காக எண்ணூறு ரூபா செலவாவதுடன் ஐந்து கொடிகள் அச்சுப்பதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் 20% கழிவு வழங்கப்படும். ஐந்து இல்லக் கொடிகளையும் அச்சிடுவதற்குச் செலவாகும் தொகையைக் கணிக்க.

(x) சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு / வீராங்கனைகளுக்கு வழங்கும் வெற்றிக் கேடயத்திற்குப் பொருத்தமான மாதிரியொன்றை வரைந்து காட்டுக.

i. **தலைப்பிற்கு பொருந்தும் விதத்தில் தலைப்பு, திகதி, நேரம், இடம் என்பவற்றை உள்ளடக்கிய சுவரொட்டி வரைந்திருத்தல**

**(02 புள்ளிகள்)**

ii. **தலைப்பிற்கு பொருத்தமான, அழைப்பிதலுக்கு பொருத்தமான முகப்புச்சித்திரம் வரைந்திருத்தல**

**(02 புள்ளிகள்)**

iii. **பொருத்தமான பன்ன வகைகள் இரண்டிற்கு**

- **பனையோலை**
- **சணல் நார்**
- **குருத்தோலை**
- **தென்னோலை**
- **அன்னாசி இலை**
- **பேரீச்சை ஓலை**
- **வெட்டகெயா**
- **துனுகெயா**
- **துன்கிரியா**

**((02 புள்ளிகள்)**

iv. **அச்சுப்பதிப்புக்கு ஏற்ற வகையில் வெட்டக்கூடிய முறையிலான காட்டுரு வரைந்திருத்தல்**

**(02 புள்ளிகள்)**

v. புறாவின் உருவம் வரையப்பட்ட அல்லது புறாவின் பெயர் எழுதப்பட்ட இலச்சினை வரைந்திருத்தல

(02 புள்ளிகள்)

vi.
- பயன்படுத்த ஏற்ற விதத்தில் இருத்தல்
- கொண்டு செல்ல இலகுவாயிருத்தல்
- மீள் பயன்படுத்தக் கூடியதாயிருத்தல்
- எல்லா பிரதேசங்களிலும் கிடைக்க கூடியதாயிருத்தல்
- சேதமாகுதல் குறைவாயிருத்தல்
- தேவையான வர்ணங்களில் பெறக் கூடியதாயிருத்தல்

(02 புள்ளிகள்)

vii. சிற்றுண்டி பொதி ஒன்றின் உருப்படம் வரைந்திருத்தல்

(02 புள்ளிகள்)

viii.
- இறப்பர் விதை
- புளியம் விதை
- இப்பில் இப்பில் விதை
- கீகிரிந்திய(சங்கு பூ
- பூசனி விதை
- ஆமணக்கு விதை
- குண்டுமணி விதை

(02 புள்ளிகள்)

ix. $4000X\ \frac{20}{100} = 3200/=$

கணித்தலுக்கு (புள்ளி 01)
சரியான விடைக்கு (புள்ளி 01)
(02 புள்ளிகள்)

x. பொருத்தமான வெற்றிக்கேடயம் வரைந்திருந்தால

(02 புள்ளிகள்)

மொத்தப்புள்ளிகள் (2 x 10= 20 புள்ளிகள்)


**இவ்வினாவின் மூலம், பாண்டங்களின் உற்பத்தி செயன்முறைகளின்போது திட்ட வரைபடங்களை வரைவதற்கு, கேத்திரகணித அளவீடுகளை பயன்படுத்தும் சரியான அடிப்படை திறன்கள் மற்றும் செயன்முறைகள் பற்றிய அறிவு எதிர்பார்க்கப்படுகிறது**

**2.** பாண்டங்கள் உற்பத்திச் செயன்முறையின் போது திட்ட வரைபடங்களை ஆக்குவதற்கு கேத்திர கணித மற்றும் பொறிமுறை வரைதல்கள் பயன்படுத்தப்படும்.


(i) கவராயம், அடிமட்டம் என்பவற்றைப் பயன்படுத்தி ஒரு பக்கம் 4 cm ஆகவுள்ள ஒரு சமபக்க முக்கோணி ABC யை அமைக்க.

(ii) 7 cm ஆகவுள்ள கோடு AB யை வரைந்து A யிலிருந்து 4 cm தூரத்தில் அமைந்துள்ள புள்ளிக்கு செங்குத்தொன்றை வரைக.

(iii) உருவில் காட்டப்பட்டுள்ள உருளையின் சரியான அளவுகளின்படி விரிப்பை வரைந்து காட்டுக.





i.




பிழையின்றி வரைந்திருத்தல் **(02 புள்ளிகள்)**


ii.




| | |
|---|---|
| AB கோடு வரைந்திருப்பின் | (01 புள்ளி ) |
| 4cm தூரத்தில் குறித்து காட்டியிருந்தால் | (01 புள்ளி ) |
| செங்குத்து வரைந்திருந்தால் | (02 புள்ளிகள்) |

**(04 புள்ளிகள்)**

iii. உருளையின் விரியலை சரியாக வரைந்திருந்தால்



**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**இவ்வினாவின் மூலம், பல்வேறுபட்ட உற்பத்தி செயன்முறைகளின் போது அலங்கார வேலைகளில் ஈடுபடுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற தையல்முறைகள், ஆபரணங்களுக்கான கலவைகள் மற்றும் அதன் நுட்பமுறைகள் பற்றிய அறிவு, திறன் என்பவற்றை மதிப்பிடுதல் எதிர்பார்க்கப்படுகிறது**

**3.** கவர்ச்சிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அலங்காரப் பொருட்களைத் தற்போது சந்தையில் காணக்கூடியதாக உள்ளது.

(i) மனை அலங்கரிப்பிற்கான ரிப்பன் எம்பிரொய்டரி முறையில் பயன்படுத்தப்படும் தையல் முறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) செயற்கை ஆபரணங்களை நிர்மாணிப்பதற்கான பான் கிளே கலவையைத் தயாரிக்கும் முறையைக் குறிப்பிட்டு, பூச்சிகளின் தாக்கத்தைத் தடுப்பதற்காகப் பயன்படுத்தும் ஒரு பாதுகாப்பு முறையைக் குறிப்பிடுக.

(iii) வெப்ப ஒட்டு முறையில் உங்கள் பாடசாலைப் புத்தகப் பையை அலங்கரிப்பதற்குப் பொருத்தமான படமொன்றை வரைக. இம்முறையில் அதனை நிர்மாணிக்கும் விதத்தை சுருக்கமாகக் குறிப்பிடுக.

i.
- ரிபன் தையல்
- தண்டு தையல்
- லேசிடெய்சி தையல்
- நேர்த் தையல்
- லூப் தையல்
- பிரெஞ்சு முடிச்சு

**போன்ற பொருத்தமான இரண்டிற்கு (02 புள்ளிகள்)**

ii. பாண் கலவையை தயாரிக்கும் முறையை எழுதியிருத்தல்
- ஒரு நாள் பிந்திய பாண் துண்டு, பைண்டர் பசை, நெப்தலின் தூள், வர்ணம்
- பாணை சிறு துகள்களாக்கி பைண்டர் பசை சேர்த்து பிசைந்து பதப்படுத்தல்
- தேவையான வர்ணம், நெப்தலின் தூள் சேர்த்து பிசைதல்
- ஆபரணங்களை தயாரித்து உலர்த்துதல் (02 புள்ளிகள்)

- பூச்சிகளின் தாக்கத்தை தடுப்பதற்கு
- நெப்தலின் தூள் பல்மாணிக்கம் தூள்
- ஏதேனும் ஒன்று எழுதியிருந்தால் 02 புள்ளிகள்)

**(04 புள்ளிகள்)**

iii. வெப்ப ஒட்டு முறைக்கு பொருத்தமான அலங்காரம் வரைந்திருந்தால் (02புள்ளிகள்)

செயன்முறை
- புடவையை முற்சுத்தம் செய்தல்
- புடவையில் அலங்காரத்தை வெட்டிக்கொள்ளல்
- அலங்காரத்தை வெப்ப ஒட்டு கடதாசியில் வைத்து சூடேற்றிய மின்னமுத்தியால் அமுத்திக்கொள்ளல்
- அலங்காரத்தை வெட்டி எடுத்து பின்னாலுள்ள கடதாசியை அகற்றிய பின் பின்னனி புடவையின் மேல் வைத்து மீண்டும் சூடேற்றிய மின்னமுத்தியால் அமுத்திக்கொள்ளல்
- ஓரங்களை நேர்த்தியாக்கி கொள்ளல் (02 புள்ளிகள்)

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**இவ்வினாவின் மூலம், புடவை நெசவிடலுக்கு பயன்படுத்தப்படுகின்ற நெசவு கோல முறைகள், உற்பத்தி செயன்முறை, செலவு விபரங்களை கணக்கிடல் ஆகியவற்றின் போது பயன்படுத்தப்படும் அறிவு, திறன் என்பவற்றை மதிப்பிடுதல் எதிர்பார்க்கப்படுகிறது**

4. மேசைக்காப்புக் கம்பள (Table mat) நூற்பாவொன்றைத் தயார்செய்வதற்குத் தேவையான நூற்பாவின் விவரங்கள் பின்வருமாறு,

- ※ நூல்பாவின் நீளம் 50 மீற்றர்
- ※ நூல்பாவின் அகலம் 20 சென்ரிமீற்றர்
- ※ ஒரு சென்ரிமீற்றருக்குப் பயன்படுத்தப்படும் பாவு நூல்களின் எண்ணிக்கை 40 ஆகும்.
- ※ பாவு நூல் இலக்கம் $2^S / 40$ ஆகும்.

(i) மேசைக்காப்புக் கம்பளத்தை நெசவு செய்வதற்குப் பொருத்தமான நெசவுக் கோலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) மேலே (i) இல் நீங்கள் குறிப்பிட்ட இரண்டு நெசவுக்கோலங்களிலும் நூல் தோன்றலை வரைபடமாக்கி அவற்றின் பெயர்களைத் தருக.

(iii) மேசைக்காப்புக் கம்பளத்தின் நூல்பாவை நெசவிடுவதற்குத் தேவையான பாவு நூல்களின் நிறையைக் கணிக்க.

i. **எளிய நெசவு**

**பாய் நெசவு (ஜடா நெசவு)**

**ஊடை நெசவு**

**பாவு நெசவு**

**எளிய சரிவுக்கோட்டு நெசவு**

**நெசவு வகை இரண்டு எழுதியிருந்தால்** **(02 புள்ளிகள்)**

ii. **நூல் தோன்றலை வரைபு படுத்தியிருந்தால்** (02 புள்ளிகள் )

**பெயரிடப்பட்டிருந்தால்** (02 புள்ளிகள் )

**(04 புள்ளிகள்)**

iii. **கிலேகிராமில் நிறை**

$$\frac{50X20X40X2}{1000X40} = 02kg$$

**சிட்டைகளில்**

$$\frac{50X20X40}{1000} = 40$$ **சிட்டைகள்**

செயன்முறைக்கு (புள்ளிகள் 02)

விடைக்கு (புள்ளிகள் 02)

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**இவ்வினாவின் மூலம், புடவை அலங்கரிப்பின் போது பயன்படுத்தப்படும் நுட்பமுறைகள், வர்ணபாவனை, நிறவேறுபாடு, அலங்கரிப்பு செயன்முறைகள் என்பன பற்றிய அறிவு, திறன்களை மதிப்பிடுதல் எதிர்பார்க்கப்படுகிறது**

5. தற்காலத்தில் புடைவை அலங்காரத்திற்காகப் பல்வேறு அலங்கார முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.
   (i) கையால் வர்ணமிடும்போது ஊதா நிறத்தைப் பெறுவதற்காகச் சேர்க்கவேண்டிய மூல வர்ணங்கள் எவை?
   (ii) அச்சிடப்பட்ட துணிகளின் வர்ணத்தை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் பிற்சுத்த முறைகள் **இரண்டைக்** குறிப்பிட்டு அவற்றில் **ஒன்றைப்** பற்றி சிறுகுறிப்பெழுதுக.
   (iii) பத்திக் நிர்மாணத்திற்குப் பொருத்தமான படமொன்றை வரைந்து, அதனை ஒரு நிறத்தைப் பயன்படுத்தி அலங்கரிக்கும் முறையை விவரிக்குக.

i. ஊதாநிறம் -- நீலம், சிவப்பு வர்ணங்கள் **(02 புள்ளிகள்)**

ii.
- சூடான அழுத்தியில் தேய்த்தல்
- வெயிலில் உலரவிடல்
- ஆவியில் உலர்த்துதல்
- காற்றில் உலர்த்துதல்

இரண்டு குறிப்பிட்டிருந்தால் (புள்ளிகள் 02)
ஒன்றை விளக்கியிருந்தால் (புள்ளிகள் 02)
**(04 புள்ளிகள்)**

iii. பொருத்தமான சித்திரத்திற்கு
அலங்கரிக்கும் முறை (புள்ளிகள் 02)

- அலங்காரத்திற்கு மெழுகை வார்த்துக் கொள்ளல்
- சாயக்கலவை பாத்திரத்தை தயார் செய்தல்
- இரசாயன கலவையை சேர்த்தல் (பெயர் எழுதியிருத்தல்)
- சாயத்தில் புடவையை அமிழ்த்துதல்
- மெழுகை அகற்றிக் கொள்ளல்
- மிதமான வெயிலில் உலர்த்துதல்

விளக்கம் எழுதியிருப்பின் (புள்ளிகள் 02)
**(04 புள்ளிகள்)**
**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**இவ்வினாவின் மூலம், களிமண் உற்பத்தி, பதப்படுத்தும் முறைகள் மற்றும் களியிலான அலங்கார பாண்டங்களின் உற்பத்தி செயன்முறைகள் என்பன பற்றிய அறிவு, திறன்களை மதிப்பிடுதல் எதிர்பார்க்கப்படுகிறது**

6. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து மட்பாண்டங்கள் உற்பத்திக்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது தெளிவாகக் காணப்படுகின்றது.
   (i) களிமண் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.
   (ii) களிமண்ணைப் பதப்படுத்தும் பிரதான முறைகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு அவற்றில் **ஒரு** முறையை விவரிக்குக.
   (iii) களிமண் பாளங்களைப் (தகடு) பயன்படுத்தி பூச்சாடியொன்றைத் தயாரிக்கும் முறையை படிமுறைகளுக்கமைய விவரிக்குக.

i.
- சூரிய வெப்பம்
- மழை நீர்
- மின்னல்
- ஈரலிப்பு
- நுண்ணுயிர்களின் தொழிற்பாடு
- பனி பெய்தல்
- தாவரம் விலங்குகளின் செயற்பாடு

**இரண்டு எழுதியிருந்தால் (02 புள்ளிகள்)**

ii.
1. கிராமிய அளவிலான தொழிநுட்பம்
2. பாரிய அளவிலான தொழிநுட்பம் (02 புள்ளிகள்)

கிராமிய முறை – கைகள், பாதங்களை பயன்படுத்தி பதப்படுத்துதல்
பாரிய அளவில் – இயந்திரங்களை பயன்படுத்தி ஒட்டும், ஒட்டாத மூலப்பொருட்களை சேர்த்து பதப்படுத்துதல்

ஒன்றை விளக்கியிருந்தால் (02புள்ளிகள் )

**(04 புள்ளிகள்)**

iii.
- பதப்படுத்தப்பட்ட களியை சம உயரத்தில் தட்டையாக்கி, சம அளவில் தகடுகளாக வெட்டிக்கொள்ளல்
- விரும்பிய எண்ணிக்கையில் தகடுகளை ஒட்டி பூச்சாடியை வடிவமைத்துக் கொள்ளல்
- உலரவிடல், சூளையிலிட்டு சுட்டுக்கொள்ளல்

**படிமுறையில் எழுதியிருந்தால் (புள்ளிகள் 04)**
**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**இவ்வினாவின் மூலம், பூங்கா அலங்கார நிர்மாணங்களில் பயன்படுத்தும் ஊடகங்கள், செதுக்கல் நுட்ப முறைகள் மற்றும் நிர்மாணிக்கும் செயன்முறைகள் என்பன பற்றிய அறிவு, திறன்களை மதிப்பிடுதல் எதிர்பார்க்கப்படுகிறது**

7. நாம் வாழும் சூழலை அலங்கரிப்பதற்காகப் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படும்.
   (i) பூங்கா அலங்கரிப்பு நிர்மாண நுட்பமுறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.
   (ii) கடதாசித்தாள் கொண்ட மட்பாண்ட அலங்கரிப்பு முறைகள் **இரண்டைக்** குறிப்பிட்டு அவற்றில் **ஒன்றை** விளக்குக.
   (iii) மனையின் உள்ளக அலங்கரிப்பிற்குப் பொருத்தமான சிலையொன்றிற்கு ஏற்ற ஊடகமொன்றைப் பெயரிட்டு அச்சிலையை நிர்மாணிக்கும் முறையை விவரிக்குக.

i. 1. தாழ் புடைப்பு (குறை புடைப்பு, சிறு புடைப்பு)
2. அரை புடைப்பு
3. பூரண/ முழுப்புடைப்பு

**(02 புள்ளிகள்)**

ii. கொலாஜ்
டெகோபாஜ்
கடதாசி கூழ்

இரண்டு எழுதியிருந்தால் (புள்ளிகள் 02)
விளக்கத்திற்கு (புள்ளிகள் 02)

**(04 புள்ளிகள்)**

iii.
- களி
- பரிசுச் சாந்து
- கடதாசி கூழ்
- உலோகம்
- சீமெந்து
- மரம்

ஏதேனும் பொருத்தமான ஒன்றிற்கு (01 புள்ளி )
சிலையை அமைக்கும் முறையை விளக்கியிருந்தால் (03 புள்ளிகள்)

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

www.e-kalvi.com